**அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தபடும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கு பின்பற்றப்படும் அதே வழிமுறைகளை பின்பற்றி மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத் தேர்வர்கள் நடத்திட அனுமதி வழங்கி– ஆணை**

சுருக்கம்

பள்ளிக்கல்வி– அரசுத் தேர்வுகள் இயக்ககம்– அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தபடும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கு பின்பற்றப்படும் அதே வழிமுறைகளை பின்பற்றி மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத் தேர்வர்கள் நடத்திட அனுமதி வழங்கி– ஆணைவெளியிடப்படுகிறது.

**பள்ளிக்கல்வி (ஜி.இ–1)துறை**

**அரசாணை (நிலை) எண். 223** **நாள்:02.11.2017**

திருவள்ளுவர் ஆண்டு 2048,
ஹேவிளம்பி வருடம், ஐப்பசி 16,

**படிக்கப்பட்டவை:–**

1. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி (அ.தே.1)த் துறை, நாள் 22.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.19, பள்ளிக்கல்வி (வி–1)த் துறை, நாள் 13.02.2003.
3. அரசாணை (நிலை) எண்.111, பள்ளிக்கல்வி (வி–1)த் துறை, நாள் 18.05.2009.
4. அரசாணை (நிலை) எண்.28, பள்ளிக்கல்வி (வி–1)த் துறை, நாள் 10.02.2010.
5. அரசாணை (நிலை) எண்.268, பள்ளிக்கல்வி (வி–1)த் துறை, நாள் 19.10.2012.
6. அரசாணை (நிலை) எண்.150, பள்ளிக்கல்வி (ஜிஇ–1)த் துறை, நாள் 07.08.2013.
7. அரசாணை (நிலை) எண்.53, பள்ளிக்கல்வி (ஜிஇ–1)த் துறை, நாள் 11.03.2015.
8. அரசாணை (நிலை) எண்.155, பள்ளிக்கல்வி (ஜிஇ–1)த் துறை, நாள் 21.09.2015.
9. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் ந.க.எண்.156188/எச்.எப். 1/2017. நாள் 20.09.2017.

**ஆணை:–**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–2018–ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும், மாநில அளவில் அரசுப் பொதுத் தேர்வுகள் நடத்தப்படும் என ஆணை வெளியிடப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து, பார்வை ஒன்பதில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு (+1 மற்றும் +2) தேர்வுகளுக்கு சமமான முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும் என்பதால், தற்போது, மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வுகள் நடத்துவதற்கு பின்பற்றப்படும் அதே வழிமுறைகளை பின்பற்றி, மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத் தேர்வுகளை நடத்திட அனுமதி வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகள் நடத்துவதற்கு பார்வை இரண்டு முதல் எட்டு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் பிறப்பிக்கப்பட்டடி அதே நெறிமுறைகள் / வழிமுறைகளை பின்பற்றி, மேல்நிலை முதலாமாண்டு ( +1) பொதுத் தேர்வுகளை நடத்திட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மை செயலாளர்